8th March 1969]

வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தில் வேலைத் தேடித் தருவதில் அவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால் அப்படிச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** மொத்தம் 2,331 ஆசிரியர்கள். யார் யார் வேலைக்குத் தக்க குவாலிபிகேஷன் பெற்றிருக்கிறார்களோ அவர்களில் 1,279 பேர்களுக்கு வேறு தொழிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. 175 பேர் இதே தொழிலில் Language Teacher என்ற முறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். temporary ஆக இடைக்காலமாக appointment பெற்றவர்கள், குவாலிபிகேஷன் இல்லாதவர்கள், unqualified Category -ல் வருகிறவர்கள் 667 பேர்கள். அவர்களுக்குக் கூட வாய்ப்பு கிடைக்கிற இடங்களில் வேலை கொடுக்க வேண்டுமென்ற ஆணை பிறப்பித்திருக்கிறோம். 14 பேருக்கு அதிலும் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

### *Hindi Schools*

* 163 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the policy of the Tamil Nadu Government with regard to the opening of Hindi Schools in Tamil Nadu by the Central Government?

### இந்தி பள்ளிகள்

**திரு. என். ஆர். தியாகராஜன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

மத்திய அரசு தமிழகத்தில் இந்தி பள்ளிகள் திறப்பதில் தமிழக அரசின் கொள்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** தமிழகத்தில், இந்தி பள்ளிகள் திறப்பதற்கான திட்டம் ஏதும் மத்திய அரசிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

**திரு. என். ஆர். தியாகராஜன் :** தலைவர் அவர்களே, தட்சிண பாரத இந்தி பிரசார சபை மூலமாக இந்திப் பள்ளி திறப்பதற்கு மத்திய அரசு திட்டமிட்டு இருக்கிறது என்பது இந்த அரசுக்குத் தெரியுமா ? தட்சிண பாரத இந்தி பிரசார சபை செலவில் மத்திய சர்க்கார் அமைத்துக் கொள்வதில் இந்த அரசுக்கு என்ன ஆட்சேபணை இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** மத்திய அமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாகப் பேசினார். தங்கள் அரசாங்கத்தில் எதுவும் திட்டம் இருப்பதாகச் சொல்லவில்லை. இந்தி பிரசார சபா இந்திப் பள்ளிகளை, பாடங்களை விரிவு படுத்துவதற்கு, எந்த முறையில் செய்கிறார்களோ அதைப் பொருத்து இந்த அரசாங்கம் முடிவு செய்யும்.

**திரு. சா. கணேசன் :** மத்திய ஆட்சி இதற்காக 1,65,000 ரூபாய் தட்சிண பாரத் பிரசார சபைக்கு வழங்கியிருப்பதாக செய்திகள் பல பத்திரிகைகளிலும் வந்திருப்பதை அமைச்சர் அவர்களும் கண்டிருக்கக் கூடும். அவர்கள் தொடங்குகிற பள்ளிகளுக்கு வேண்டிய உதவியோ அல்லது ஒத்தாசையோ அல்லது பாது காப்போ அரசு கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** இந்தி மொழியைப் பரப்பு வதில் ஏராளமான பணம் செலவழிப்பதற்கு மத்திய நிதியமைச்சர் மிகவும் தாராளமாக இருக்கிறார்கள். இந்த அரசாங்கம் அதற் காக எந்த உதவியையும் செய்வதாக இல்லை. அவர்களுடைய செயல் இந்த நாட்டு மக்கள் மனதைப் புண்படுத்தாமல் இருந்தால், அவர்கள் மொழி ஆதிக்கத்தைக் கொண்டுவர முயற்சிக்காமல் இருந்தால், இந்த அரசு அதைப்பற்றிக் கவலைப்படாது.

**திரு. என். ஆர். தியாகராஜன் :** தாங்களாகவே இஷ்டப்பட்டு இந்தி படிப்பதற்கு, தட்சிண பாரத் இந்தி பிரசார சபையில் பயிற்சி பெறுவதற்கு வந்தால், இந்த அரசுக்கு என்ன ஆட்சேபணை இருக்கிறது ? தமிழகத்தில் தமிழைத் தவிர வேறு ராஜ்ய, வேறு நாட்டு மொழிகளைத் தாங்களே கற்றுக் கொடுக்க பள்ளிகளை நடத்தினால் அதில் என்ன ஆட்சேபணை இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** இந்த அரசோ அல்லது இந்த அரசைக் கட்டிக் காக்கும் கட்சியோ எந்த மொழியைப் பயிலு வதற்கும் ஆட்சேபிக்கவில்லை. இந்தியை யாரும் படிப்பதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் இந்தி படித்தால்தான் இந்த நாட்டில் இருக்க முடியும். இந்திதான் இந்த நாட்டின் ஆட்சி மொழி, நிர்வாக மொழி என்று சொல்லித் தமிழ்நாட்டு மக்களை அடிமை கொள்ள முனைந்தால் அதை இந்த அரசு ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது.

(கைதட்டல்)

**திரு. எம். எத்திராஜுலு :** இந்தி ஆசிரியர்கள் 600 பேர்கள் இப்போது வேலையில்லாமல் இருக்கிறார்கள். எதையும் கற்பது மனிதனுடைய உரிமை. அந்த வேலையற்ற ஆசிரியர்களை வைத்துக் கொண்டு கிராமத்தில் உள்ளவர்கள் பொதுச் செலவிலோ மற்ற வர்கள் செலவிலோ பள்ளிகள் வைத்து நடத்தி இந்தியைக் கற்றுக் கொடுத்தால் அதில் இந்த அரசு குறுக்கிடுமா?

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** இந்தி ஆசிரியர்களைப் பற்றி போன கேள்வியிலேயே பதில் சொன்னேன். அங்கத்தினர் ஊர் ஊராகச் சென்று பள்ளிகளை ஆரம்பித்தால், அவர் எப்படித் தொடங்குகிறார் என்பதைப் பொறுத்து அரசாங்கம் முடிவு செய்யும்.